**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.909/2023 பெயர் : பாலசுப்பிரமணியம் நாள் : 07.04.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கிரையப் பத்திரத்தில் கிரையம் பெற்றவர் என்ற இடத்தில் கையொப்பம் செய்துள்ள முதலாவது நபர் எனது மகன், மூன்றாவது நபர் எனது மனைவி ஆவார். வாதி ரித்திகா சொத்தில் பங்கு வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி ரித்திகா கிரையப்பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால், சரிதான். கிரையத்திற்காக யார் யார் என்ன தொகை கொடுத்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பணம் கொடுத்தால், DD ஆகவோ, காசோலையாகவோ தான் கொடுக்க முடியும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரமும், பரிவர்த்தனை பத்திரம் பற்றிய விபரமும், தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றிய விபரமும் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. கிரையப் பத்திரத்தில் மேற்படி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், இல்லை. ஆரம்பத்தில் சின்னதம்பி என்பவருக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் மகன்கள் பாகம் பிரித்துக்கொண்டு, பரிவர்த்தனை மற்றும் செட்டில்மெண்ட் பத்திரங்கள் ஏற்பட்ட பிறகு தான் கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு தாவா சொத்தில் பாதி பங்கு பாத்தியம் என்பதால், நான் பெற்ற கிரையம் செல்லாது என்று சொன்னால், சரியல்ல. பண பரிவர்த்தனை எதுவும் நடைபெறவில்லை என்றாலும், கடனுக்காக தான் கிரையம் எழுதப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. நான் 1 மற்றும் 3-வது பிரதிவாதிகளுக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.